**சுருக்கம்**

சென்னை மாவட்டம் – சென்னை மாநகராட்சி – மண்டலம்–8 – வார்டு 127 – தியாகராய நகர் கிராமம் – கண்ணம்மாபேட்டை, புல எண்கள்.5709, 5710 மற்றும் 5711 ஆகியவற்றிலுள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மனைகளில் வசிந்து வந்த 114 குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டதில் விடுபட்ட 10 குடியிருப்புதாரர்களுக்கு மனைகள் ஒதுக்கீடு செய்து கிரயப்பத்திரம் வழங்க சென்னை மாநகராட்சிக்கு அதிகாரம் அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.213 நாள்: 20.09.2010

புரட்டாசி – 4,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.1803, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்.29.10.1981.

**மேலும் படிக்கவும்:**

2. சென்னை மாநகராட்சி ஆணையர் கடிதம் நிலம் மற்றும் உடைமைத் துறை ந.க.எண்.எல்இ8/6040/1997 நாள்.19.10.2004, 22.02.2005, 18.09.2006, 21.11.2007, 02.04.2008 மற்றும் 19.08.2008.
3. அரசு கடித எண்.32734/மாந.1/2006–5, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.18.11.2009.
4. சென்னை மாநகராட்சி ஆணையர் கடித எண் நிலம் மற்றும் உடைமைத் துறை ந.க.எண்.எல்இ 8/6040/1997, நாள்.23.03.2010.

* * * * *

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை மாநகராட்சி, மண்டலம்–8–க்குட்பட்ட வார்டு–127–ல் தியாகராய நகர் கிராமம், கண்ணம்மா பேட்டை, புல எண்கள்.5709, 5710 மற்றும் 5711 ஆகியவற்றிலுள்ள பூங்கா மற்றும் வீட்டு வசதி திட்டத்துக்காக சென்னை மாநகராட்சியால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட 59 மனை பரப்பளவு கொண்ட நிலத்தினை சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கும் மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் நில ஆர்ஜிதம் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் வசிக்கும் இடமாக மனை ஒன்றுக்கு மாத வாடகை ரூ.2/– என 1969 க்கு முன் நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலத்தினை, முறையே சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு மனை ஒன்றுக்கு ரூ.2000/– வீதமும், நில ஆர்ஜிதத்தில் பாதிக்கப்பட்டு மாற்று அடிப்படையில் குடியிருக்க அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மனை ஒன்றுக்கு

ரூ.3000/– வீதமும் விற்பனை செய்திட மன்றத் தீர்மானம் எண்.865/1969, நாள் 29.10.1969–ன்படி அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிலத்தினை விற்பனை செய்திட சென்னை மாநகராட்சிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

1) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் நிர்ணயிக்கும் அபிவிருத்தி கட்டணத்தை குடியிருப்புதாரர்களிடமிருந்து முழுமையாக வசூல் செய்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு செலுத்துவதுடன் மற்றும் விற்பனை பத்திரப்பதிவுக்கு முன்னர் நிலத்தின் விற்பனை விலையை வசூல் செய்ய வேண்டும்.

2) பராமரிப்பு கட்டணத்தை மாதந்தோறும் குடியிருப்புதாரர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டும்.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதங்களில் மேற்படி பார்வை ஒன்றில் கண்ட அரசாணையினை அமுலாக்கம் செய்வதற்கு தனி அதிகாரி மன்றத் தீர்மானம் எண்.988/1981, நாள் 14.11.1981 ல் முடிவெடுக்கப்பட்டு சென்னை மாநகராட்சியின் வருவாய் துறை மூலமாக குடியிருப்புதாரர்களுக்கு 1982 ஆம் வருடத்தில் நிலக்கிரயம் செய்து வழங்கப்பட்டதாகவும், மேற்கண்ட இடத்தில் மொத்தம் 135 மனைகள் இருந்தன என்றும் இந்த 135 மனைகளில் 21 மனைகள் சென்னை மாநகராட்சி (பொது) என வகைப்படுத்தப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான நிலம் என்பதால் இதனை சென்னை மாநகராட்சியால் விற்பனை செய்ய இயலாது எனவும், மீதமுள்ள 114 மனைகளில் 9 நபர்கள் தங்களுக்கு கிரயப்பத்திரம் வழங்கப்படவில்லை எனவும், அப்போது தங்களிடம் பணம் இல்லாததால் கிரயப்பத்திரம் பெற இயலவில்லை எனவும், தற்போது கிரயத்தொகை செலுத்த இருப்பதாகவும் கோரிக்கைகள் அளித்திருந்தனர் எனவும், இதற்கிடையில் திரு.பொன்னையா என்பவருக்கு கிரயப்பத்திரம் வழங்கப்படாமல் இருப்பதும், நீதி மன்ற உத்திரவின்படி இவருக்கு கிரயப்பத்திரம் வழங்கப்பட வேண்டியிருப்பதும் தெரியவந்தது எனவும், ஆக மொத்தம் கீழ்கண்ட 10 நபர்களுக்கு கிரயப்பத்திரம் வழங்கப்படாமல் விடுபட்டுள்ளது தெரியவந்தது எனவும் தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | பெயர் மற்றும் விலாசம் | பிளாட் எண். கதவு எண். | குடியிருக்கும் காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு. சுப்புக்கண்ணு, த/பெ. நடேசன், 35/18 பிளாட் எண்.115, கார்ப்பேரஷன் காலனி, 3வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 115/18 | 45 | ஒதுக்கீடுதாரர் |
| 2. | திருமிதி.எல்லம்மாள், க/பெ.அருணாச்சலம், புது எண்.27, பழைய எண்.26, பிளாட் எண்.48, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 48/27 | 50 | வாரிசுதாரர் |
| 3. | திருமதி. லஷ்மி, க/பெ. (லேட்) கந்தசாமி, 8/35, பிளாட் எண்.56, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 56/35 | 50 | வாரிசுதாரர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | திரு. G. ராதாகிருஷ்ணன், த/பெ.(லேட்) கோபால்சாமி, 18/30, பிளாட் எண்.51, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 51/30 | 50 | வாரிசுதாரர் |
| 5. | திரு.சத்தியநாராயணசிங், த/பெ. பாலாஜி, 16/31, பிளாட் எண்.52, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை – 17 | 52/31 | 50 | வாரிசுதாரர் |
| 6. | திருமதி. நாகம்மாள், க/பெ. (லேட்) குப்பன், 37/19, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 78/19 | 50 | வாரிசுதாரர் |
| 7. | திரு. கருணாகரன், த/பெ. பெருமாள் மற்றும் ஜெயலஷ்மி, 4/37, பிளாட் எண்.58, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை – 17 | 58/37 | 50 | வாரிசுதாரர் |
| 8. | திரு. முனுசாமி, த/பெ. துலுக்கானம், 5/3, பிளாட் எண். 62, கார்ப்பரேஷன் காலணி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 62/03 | 20 | குடியிருப்பவர் |
| 9. | திருமதி. சுமதி, க/பெ. பாஸ்கரன், 6/36, பிளாட் எண்.57, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 57/36 | 20 | குடியிருப்பவர் |
| 10. | திரு. பொன்னய்யா, 14/32, பிளாட் எண்.91, கார்ப்பரேஷன் காலனி, 3வது தெரு, தி.நகர், சென்னை – 17 | 91/36 | 50 | ஒதுக்கீடுதாரர் |

மேற்கண்ட 10 நபர்களில் 8 நபர்கள் மட்டும் ஒதுக்கீடுதாரர்கள் மற்றும் ஒதுக்கீடுதாரர்களின் வாரிசுதாரர்கள் ஆவார்கள் (மேலே வரிசை எண்.1, 2, 3, 4, 5, 6, 7, மற்றும் 10) மற்ற 2 நபர்கள் (வரிசை எண்.8 மற்றும் 9) குடியிருப்பினை அனுபவித்து வருபவர்கள் ஆவார்கள். மேலும் சென்னை மாநகராட்சி நிலத்தினை அனுபவித்து வரும் 10 குடியிருப்பாளர்களுக்கு நில ஒதுக்கீடு செய்ய அரசாணை அமல் செய்யப்பட்ட நாளிலிருந்து வருடத்திற்கு 12 சதவிகித வட்டியுடன் சேர்த்து வசூல் செய்து அவர்களுக்கு கிரயம் செய்து கொடுக்க ஆணை வேண்டி, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி வைக்க மன்றத் தீர்மான எண்.427/2006, நாள் 31.08.2006 ல் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

3. பார்வை மூன்றில் கண்ட அரசு கடிதத்தில் இப்பொருள் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளருடன் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் கடந்த 10.11.2009 அன்று கலந்தாய்வு செய்ததில், இப்பொருள் குறித்து மீண்டும் மன்றத்தில் விவாதித்து உரிய முடிவெடுத்து தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

4. பார்வை நான்கில் கண்ட சென்னை மாநகராட்சி ஆணையரது கடிதத்தில் இப்பொருள் குறித்து கடந்த 26.02.2010 அன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, தீர்மான எண்.116/2010 நாள்.26.02.2010–ல் மேற்படி 10 குடியிருப்பாளர்களுக்கு கிரயப்பத்திரம் வழங்குவது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் அதற்கான உரிய அரசாணை பெற்றுத் தருமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், சென்னை மாநகராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மான எண்.116, நாள் 26.02.2010 ன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி ஆணையர் அனுப்பியுள்ள கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து, அவ்வாறே ஏற்று, சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8, வார்டு எண்.127, புல எண்கள்.5709, 5710 மற்றும் 5711 தியாகராய நகர் கிராமம், கண்ணம்மா பேட்டை குடியிருப்பு பகுதியில் கிரயப்பத்திரம் வழங்காமல் விடுபட்டு போன கீழ்வரும் 10 குடியிருப்பாளர்களுக்கு பார்வை 1 ல் கண்ட அரசாணை அமல் செய்யப்பட்ட நாளிலிருந்து வருடத்திற்கு 12 சதவிகித வட்டியுடன் சேர்த்து வசூல் செய்து கீழ்கண்ட நபர்களுக்கு கிரயப்பத்திரம் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு சென்னை மாநகரட்சி ஆணையருக்கு அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் விலாசம் | பிளாட் எண். கதவு எண். | குடியிருக்கும் காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு. சுப்புக்கண்ணு, த/பெ. நடேசன், 35/18 பிளாட் எண்.115, கார்ப்பேரஷன் காலனி, 3வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 115/18 | 45 | ஒதுக்கீடுதாரர் |
| 2. | திருமதி.எல்லம்மாள், க/பெ.அருணாச்சலம், புது எண்.27, பழைய எண்.26, பிளாட் எண்.48, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 48/27 | 50 | வாரிசுதாரர் |
| 3. | திருமதி. லஷ்மி, க/பெ. (லேட்) கந்தசாமி, 8/35, பிளாட் எண்.56, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 56/35 | 50 | வாரிசுதாரர் |
| 4. | திரு. G. ராதாகிருஷ்ணன், த/பெ.(லேட்) கோபால்சாமி, 18/30, பிளாட் எண்.51, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 51/30 | 50 | வாரிசுதாரர் |
| 5. | திரு. சத்தியநாராயணசிங், த/பெ.பாலாஜி, 16/31, பிளாட் எண்.52, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 52/31 | 50 | வாரிசுதாரர் |
| 6. | திருமதி. நாகம்மாள், க/பெ. (லேட்) குப்பன், 37/19, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 78/19 | 50 | வாரிசுதாரர் |
| 7. | திரு. கருணாகரன், த/பெ. பெருமாள் மற்றும் ஜெயலஷ்மி, 4/37, பிளாட் எண்.58, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை – 17 | 58/37 | 50 | வாரிசுதாரர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | திரு. முனுசாமி, த/பெ. துலுக்கானம், 5/3, பிளாட் எண்.62, கார்ப்பரேஷன் காலணி, 2வது தெரு, திநகர், சென்னை – 17 | 62/03 | 20 | குடியிருப்பவர் |
| 9. | திருமதி. சுமதி, க/பெ. பாஸ்கரன், 6/36, பிளாட் எண்.57, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 57/36 | 20 | குடியிருப்பவர் |
| 10. | திரு. பொன்னய்யா, 14/32, பிளாட் எண்.91, கார்ப்பரேஷன் காலனி, 3வது தெரு, தி.நகர், சென்னை– 17 | 91/36 | 50 | ஒதுக்கீடுதாரர் |

6. சென்னை மாநகராட்சி ஆணையர் இவ்வாணையை செயல் படுத்திட தகுந்த உடன் நடவடிக்கை எடுத்து, எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை அரசுக்கு உடன் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை வருவாய்த் துறையின் அ.சா.எண்.38896/நி.எ.1/2010–1, நாள்.26.08.2010–ல் பெறப்பட்ட ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர் ,சென்னை மாநகராட்சி, சென்னை–600 003
<u>நகல்:-</u>
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை–600 001
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, சென்னை– 600 108
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின்
தனி செயலர், சென்னை – 600 009
வட்டாட்சியர், கிண்டி – மாம்பலம் வட்டம், சென்னை–600 078.
வருவாய் துறை, சென்னை – 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 600 009
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்